அமைச்சர்கள், தகைசான்ற மற்றவர்கள் முதன்மை பெற்றவர் (V.I.Ps.) ஆகியோரின் பயனுக்காக இரண்டு கார்கள் இராமநாதபுரம், செங்கற்பட்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு கார், ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

(உ) ஆம். துறை கார் ' (staff car) ', எண் : எம்.எஸ்.வி. 7777 ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

(எ) மேற்சொன்ன எம்.எஸ்.வி. 7777-ம் எண் கார் ரூ. 20,500-க்கு கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு. ஏ.ஜி. ஒசிர்கான் என்பவருக்குப் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

Andipatti Agriculturists' Association

* 95 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the premises of the Agriculturists' Association at Andipatti near Kottagudi in Melur taluk of Madurai district was affected by fire in the months of January, February 1968;

(b) the cause of the fire accident; and

(c) the amount of loss incurred thereby?

ஆண்டிப்பட்டி விவசாயிகள் சங்கம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மதுரை மாவட்ட மேலூர் தாலுக்கா கொட்டக்குடியை அடுத்த ஆண்டிப்பட்டி என்னும் ஊரில் விவசாயிகள் சங்கம் இயங்கும் இடம் தீ விபத்திற்குள்ளானதா?

(இ) தீ விபத்திற்குக் காரணமென்ன?

(உ) எவ்வளவு ரூபாய் மதிப்புக்கு நட்டம் ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) கிராம மக்களிடையே ஏற்பட்ட பகை உணர்ச்சியே இதற்குக் காரணம்.

(உ) ரூ. 150.

Resolution of the Cumbum Panchayat Union.

* 96 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether Cumbum Panchayat Union, Madurai district has passed any resolution in April 1968, and sent the same to the Government requesting the postponement of the collection of loans from the agriculturists; and

3rd March 1969]

(*b*) whether the Government are aware of the fact that famine conditions prevailed in Cumbum area last year due to the failure of rains?

கம்பம் ஊராட்சி ஒன்றிய தீர்மானம்

* **திரு. என். ஆர். தியாகராஜன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஏப்ரலில் மதுரை மாவட்ட கம்பம் ஊராட்சி ஒன்றியம் விவசாயிகளுக்கு கொடுத்துள்ள கடன் வசூலை ஒத்தி வைக்கும்படி தமிழக அரசைக் கேட்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதா?

(இ) கம்பம் பகுதியில் சென்ற ஆண்டு மழையின்றி பஞ்ச நிலை ஏற்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) மழையின்மையால் சென்ற ஆண்டு கம்பம் பகுதியில் பஞ்சநிலை ஏற்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் மட்டுமல்ல, இந்த ஆண்டில்கூட கம்பம் பகுதியில் பஞ்ச நிலை இருக்கிறது என்பது ஊர் அறிந்த ரகசியம். மதுரை மாவட்டத்தில் பெரும் பகுதியில் பஞ்சநிலை ஏற்பட்டிருக்கிறது என்று அங்கேயிருந்து தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஐந்து லட்சம் ரூபாய் அதற்குப் பஞ்ச நிவாரணம் அளிக்கலாம் என்று கலெக்டர் கூறினார். 'அதுபோதாது; யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது போல அது ஆகிவிடும்' என்று டி.டி.சி-யில் நான் கூறினேன். அது அரசுக்குத் தெரியாவிட்டாலும்கூட போர்டு மெம்பர் ஒருவரை அனுப்பி மதுரை ஜில்லாவில் உள்ள பஞ்ச நிலையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் போன வருஷம் கம்பம் பகுதியில் பஞ்ச நிலை இருந்ததா என்று கேட்டிருந்தார்கள். கிணறு வெட்டுவதற்கு, மற்ற காரணங்களுக்காக வாங்கிய கடன்களை கொஞ்சம் ஒத்தி வைக்கவேண்டுமென்பது பற்றிதான் கேள்வி. கம்பம் பகுதியில் போன வருஷம் பஞ்சநிலை இல்லை. அவர்களுக்கே அது தெரியும். இந்த வருஷ விவரம் தெரியவில்லை. இருந்தாலும் கம்பத்திலேயே பஞ்சம் என்றால் மதுரையில் பரமபஞ்சம் என்றுதான் பொருள். இப்போதிருக்கிற இடங்களிலே, கம்பம் பகுதி தான் தானியக் களஞ்சியமாக மற்ற இடங்களுக்கு உணவு வழங்கும் இடமாக இருக்கிறது. இந்த நிலையில் ஊரிலே இருக்கிற பஞ்சத்தை காட்டி, அங்குள்ள கடனை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

கடந்து ஆண்டு பஞ்சமில்லை. இந்த ஆண்டு விவரம் தெரியவில்லை. அப்படியிருந்தால் அதற்கு சாத்தியமான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1968-ல் கொடுத்த வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்பது. இந்த வருஷம் அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : போன வருஷத்திலே ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு பஞ்சம் ஏற்படவில்லை என்பது தான் கலெக்டர் நமக்கு அறிவிக்கிற விவரம்.

Collectors' Conference

* 97 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the discussions which were held in regard to procurement of foodgrains in the Collectors' Conference held at Tiruchirappalli in 1967; and

(*b*) whether the procurement of Samba paddy was lesser in 1968 than in 1967?

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

திரு. என். ஆர் தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சியில் 1967-ல் நடந்த கலெக்டர்கள் மகாநாட்டில் உணவுக் கொள்முதல் பற்றி பேசியதென்ன?

(இ) சம்பா கொள்முதல் 1967-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1968-ல் குறைந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) திருச்சிராப்பள்ளியில் 1967 ஆகஸ்டு திங்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், கொள்முதல் திட்டத்தின்கீழ் குறிக்கோள் அளவு குறித்தும், போக்குவரத்து பற்றியும் விவாதிக்கப்பட்டது. உணவுத் தானியங்களைக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் திண்ணிய முறையில் கட்டுப்படுத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. குறுவைப் பயிர் கொள்முதல் செய்தல், உணவு தானியங்களைப் பிற இடங்களுக்கு அனுப்பும் திட்டம் முதலான ஏனைய பொருள்கள் குறித்தும் பொதுவாக விவாதிக்கப்பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு சாதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1968 ஆண்டு சம்பா கொள்முதல் ஓரளவு குறைவாகவே இருந்தது. சீர்கேடான பருவநிலையே இதற்கான முக்கிய காரணமாகும்.